# விளம்பரம்™

# VLAMBARAM™

416-282-8059 416-282-4978

சமூக முன்னேற்றப் பத்திரிகை மாதமிருமுறை இலவசம்

நதி 12 AUGUST 01, 2002 பாலம் 15


Above the Crowd!

வீடு விற்க, வாங்க...

Raja M. Mahendran, P. Eng.
(Sales Rep.)

Office: 416.491.4002
Pager: 416.589.4270

இன்றைய சேவையே நாளைய வெற்றி!




## பாப்பரசரின் ரொரன்ரோ விஜயம்!



உலக இளைஞர் நாளை ஒட்டி இரண்டாம் அருளப்பர் சின்னப்பர் ரொரன்ரோவிற்கு யூலை 23, 2002 வந்தார். 82 வயது பாப்பரசர் இதற்கு முன்னர் 1987இல் ரொரன்ரோ வந்திருந்தார். பாப்பரசரை கனடாவின் பிரதமர் யோன் கிரச்சியான் ரொரன்ரோ விமான நிலையத்தில் வரவேற்றார். பின்னர் அங்கிருந்து உலங்கு வானூர்தியில் சிம்கோ ஏரியில் அமைந்துள்ள ஸ்ரோபெரி தீவிற்கு ஓய்வு எடுப்பதற்காக அழைத்தச் செல்லப்பட்டார்.

பாப்பரசர் ரொரன்ரோவில் ஒரு சில நிகழ்ச்சிகளில் பங்கு பற்றிவிட்டு இறுதியாக டவுன்ஸ்வியூ பூங்காவில் பொதுமக்களுக்கான ஆராதனை ஒன்றில் ஞாயிறு யூலை 28, 2002 காலை பங்கு பற்றிவிட்டு ரொரன்ரோவில் இருந்து புறப்பட்டார். இவ் ஆராதனையில் எட்டு இலட்சம் மக்கள் பங்கு பற்றியதாகக் குறிப்பிடப்படுகிறது.

(இவ்விடத்திலேயே 1987 இலும் பாப்பரசரின் வருகையின் போது பொதுமக்களுக்கான சிறப்பு ஆராதனை நடைபெற்றது. அப்போது இவ்விடம் விமானப்படைத் தளமாக இருந்தது. அந்த ஆராதனையில் பத்து இலட்சம் மக்கள் பங்கு பற்றியிருந்தனர்)

இம்முறை இவ்வாராதனையில் பங்கு பற்றுவதற்காக மக்கள் இலண்டன், இத்தாலி, பிலிப்பைன்ஸ், இந்தியா போன்ற பல நாடுகளிலும் இருந்து ஆயிரக்கணக்கில் வந்திருந்தார்கள். குளிரையும் மழையையும் பொருட்படுத்தாது மக்கள் சனிக்கிழமையில் இருந்தே பூங்காவில் காத்திருந்தார்கள். ஞாயிறு காலை உலங்கு வானூர்தியில் பூங்காவிற்கு அழைத்து வரப்பட்ட பாப்பரசர், அங்கு கூடியிருந்த மக்களுக்கு இரண்டாயிரத்திற்கு மேற்பட்ட பாதிரியார்களுடன் ஞாயிறு காலை ஆராதனை நடத்தினார்.

Singapore Communication

Only $30.00/M
- Reliable & Friendly Service
- 50 mins day time Free
- Evenings & Weekend Free
- Every Day (12 noon-1p.m) Free
- c/w, c/c, v/m free
- Add.Daytime min 0.30ctsonly

**Unlimited Tallking* $50.00 /m**
- u/L Incoming call 500 mins outgoing*
- Up to $150.00 Hardware rebate in store

Store: 416-740-5292

Buy One Cell Accessories & Get Second One ½ Price

Inventory (Final) Clearance Sale! Start: August 1st, 02

5010 Steeles Ave. W., Unit 17ABC - Kipling & Steeles



சந்திரமௌலீஸ்வர சிவாலயம்

ஸ்காபரோவில் புதிய இடத்தில் சிவன் ஆலயம் விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளது.

3011 Markham Road, Unit 62 & 63
(North of Mcnicoll Ave.)
Tel: 416-754-7338 / 416-724-7480



துரித பணமாற்றுச் சேவை

வவுனியா - கொழும்புச் சுற்றுப் புறங்களுக்கும் - சிங்கப்பூர் - சென்னை ஆகிய இடங்களுக்கும் கடுகதியில் பணம் அனுப்புவதற்கு

மு. காசிப்பிள்ளை & சன்ஸ்

416.267.8221



Insurance & Financial Services

Balan Kanapathi (Agent)

- Auto
- Home
- R.R.S.P
- Life
- Disability
- Mutual Fund
- Group Insurance
- Child Education
- Travel+ Business

LIBERTY MUTUAL London Life

•416.321.1515 •905.294.2429

4433 Sheppard Ave. E. Suit 200, (Brimley/Sheppard)

# அறிவும் ஆக்கமும் 107

விஜய குலத்துங்கம்



அண்மையில் மத்திய ஆபிரிக்காவிலுள்ள chad என்னுமிடத்தில் Michael Brunet உம் அவரது சகாக்களும் 6.7 மில்லியன் வருடங்களுக்கு முன்னர் வாழ்ந்துள்ள மனிதனை ஒத்த ஓர் உயிரினத்தின் மண்டை ஓட்டை அகழ்ந்து எடுத்துள்ளார்கள். இந்த மண்டையோடு தாடையையும், பற்களையும் கொண்டுள்ளதாக இருந்தது. இதற்கு 'Toumai' என்று பெயரிட்டு உள்ளார்கள். Toumai என்பது ஆபிரிக்க மொழிகளில் ஒன்றாகிய Goran என்ற மொழியில் உயிரின் எதிர்பார்ப்பு என்று பொருள்படும்.

பிரான்சு நாட்டிலுள்ள poitiers பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த Michael Brunet உம், 10 நாடுகளைச் சேர்ந்த 40 விஞ்ஞானி களையும் கொண்ட ஒரு குழு 1994ஆம் ஆண்டு இந்த chad பகுதியில் தனது அகழ்வு வேலை களையும், எலும்புக் கூடுகளை தேடும் முயற்சியையும் ஆரம்பித்தது. இன்றுவரை 10,000 இற்கு மேற்பட்ட fossil களை இவர்கள் கண்டு எடுத்துள்ளார்கள். இவை பலதரப்பட்ட விலங்குகளையும் சேர்ந்தவையாகும். 7 வருடங்களுக்கு முன்னர் 3.5 மில்லியன் வருடங்கள் வயதுள்ள hominid வர்க்கத்தைச் சேர்ந்த மண்டையோடு அடங்கும். சென்ற வருடம் ஜுலை மாதம் 19ஆம் திகதிதான் இந்தக் குழுவில் அங்கம் வகித்த ஒரு மாணவ-னான Ahounta Djimdoumalbaye என்பவர் இந்த 7 மில்லியன் வருடங்கள் வயதுள்ள இந்த மண்டை ஓட்டை கண்டெடுத்தார். இதைத் தொடர்ந்த 7 மாதங்களுக்கு இதையொத்த 5 வெவ்வேறு தனிநபர்களுக்குச் சொந்தமான எலும்புப் பாகங்களையும் கண்டெடுத்தார்கள். இந்த மனித எலும்புகளைத் தவிர, மீன்கள், முதலைகள், எலிகள், ஒட்டகச் சிவிங்கி போன்ற விலங்குகளின் எலும்புகளும் கண்டு எடுக்கப் பட்டன.

இதற்கு முன்னர் கண்டெடுக்கப்பட்ட எலும்புக் கூடுகளில் Lucy எனப் பெயரிடப்பட்டதுதான் பிரபல்யம் ஆனது. இது Australopithecus afarensis என்று பெயரிடப்பட்டது. இது சுமார் 2.9 மில்லியன் தொடக்கம் 3.6 மில்லியன் வருடங்கள் வயதுடையது எனக் கணிக்கப்பட்டது. இதன் பின்னர் 4.4 மில்லியன் வருடங்கள் வயதுள்ள Ardipithecus ramidus ramidus என்ற இன மண்டையோடும், 5.8 மில்லியன் வருடங்கள் வயதுள்ள Ardipithecus ramidus kadabba என்று பெயரிடப்பட்ட மண்டையோடும் கண்டுபிடிக்கப்பட்டது. ஆனால் தற்போது Toumai என்று கொடுக்கப்பட்ட பெயரையும், Sahelanthropus tchadensis என்ற விலங்கியல் பெயர் சூட்டப்பட்டது. முன்பு கண்டு பிடிக்கப்பட்டவற்றை எல்லாம் விட மிகவும் வயது கூடியதாக 6-7 மில்லியன் வருடங்கள் எனக் கணிக்கப்பட்டுள்ளது.

இந்த மண்டையோட்டின் சில அம்சங்கள்தான் பலரையும் திகைக்க வைத்துள்ளது. இது Ape எனப்படும் மனிதக் குரங்கின் இயல்புகள் சிலவற்றையும், தற்போதைய மனிதனின் இயல்புகளையும் கொண்டதாக உள்ளது. இந்த மண்டையோட்டின் அளவை வைத்து இது ஒரு சிம்பன்சி குரங்கின் அளவில்தான் இருந்திருக்க வேண்டும் எனக் கருதப்படுகின்றது. Brow Ridge எனப்படும் புருவ எலும்புகள் தடிப்பாக சிம்பன்சியை ஒத்ததாக இருந்தது. ஆனால் முகம் Ape, சிம்பன்சிகளைப் போல் நீண்டு இல்லாது, தற்போதைய மனிதரைப் போல் தட்டையாக காணப்படுகிறன்றது. சிம்பன்சியின் கீழ் தாடைப் பற்கள் நீண்டதாக இருப்பதால், தாடையும் நீண்டு காணப்படும். ஆனால் இந்த மண்டையோட்டில் தாடைகள் குறுகியதாகவும், பற்கள் தற்கால மனிதரைப் போல் சிறிய பற்களாக இருந்தன. இதில் உள்ள வியப்பூட்டும் விடயம் என்னவென்றால் ஏறக்குறைய 3 - 3.5 மில்லியன் வருடங்களுக்கு முன்னர் வாழ்ந்த Lucy ஐப் போன்றவற்றை விட 7 மில்லியன் வருடங்களுக்கு முன் வாழ்ந்த, தற்போது கண்டு பிடிக்கப்பட்ட மண்டையோடு கூடிய முன்னேற்றம் அடைந்ததாக, கூடிய பக்கம் தற்கால மனிதரை ஒத்ததாக இருப்பதுதான்.

முன்னர் கண்டுபிடிக்கப்பட்ட மண்டையோடுகள், எலும்புகள் எல்லாம் கிழக்கு ஆபிரிக்காவிலுள்ள Great rift Valley என்னும் இடத்தில்தான் கண்டு பிடிக்கப்பட்டன. ஆனால் தற்போது கண்டு பிடிக்கப்பட்டது இந்த இடத்தில் இருந்து மேற்குப் பக்கமாக 2400 கிலோமீற்றர் தூரத்தில் உள்ள Chad என்னுமிடத்தில் அகழ்ந்தெடுக்கப் பட்டதாகும். அந்தக் கால கட்டத்தில் இவ்வளவு தூரம் தரை மார்க்கமாக உயிர்கள் அசைந்து சென்றிருக்க வாய்ப்பில்லை. எனவே ஏற்கனவே இருந்த கொள்கையான மனித இனம் கிழக்கு ஆபிரிக்காவில் ஆரம்பிக்கப்பட்டது என்பதும் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது என நம்பப் படுகின்றது. முன்னர் இருந்த கூர்புக் கொள்கையின் படி, குரங்கிலிருந்து படிப்படியாக மனிதக் குரங்காகி, பின்னர் மனிதன் உரு வெடுத்தான் என்பது தற்போது ஏற்றுக் கொள்ள முடியாது போய்விட்டது. முன்னர் famil tree எனப்படும் சந்ததி மரம் வடிவமைக்கப் பட்டது பிழையென்றாகி அது மரம் போன்று சற்றுக் கிளைவிட்டது அல்லது மிகவும் சிக்கலான பற்றை அல்லது புதர் போன்று உள்ளதெனக் கருதப்படுகின்றது.

இருமடங்கு பழமை வாய்ந்த எலும்புக்கூடு, மண்டையோடுகள் அதன் பின்னர் வந்த அதாவது 3.5 மில்லியன் வருடங்களுக்கு பின்னர் வாழ்ந்த உயிரினத்தைவிட முன்னேற்றம் அடைந்து இருந்தால், வெவ்வேறு அமைப்பு களை உடைய பலவகைப்பட்ட உயிரினங்கள் ஒரே நேரத்தில் வாழ்ந்திருக்கக் கூடும் என ஒருசாராரால் இப்போது நம்பப்படுகின்றது. பின்னர் இவற்றுக் கிடையே சூழ்நிலைக்கு ஏற்ப பிழைக்கக் ஓடிய இனங்கள் நிலைத்து நின்றன எனக் கூறப்படுகின்றது.

சிலவேளைகளில் ஆரம்பத்தில் மனிதன் இருந்து சில தேவைகளுக்கும், சூழ் நிலைகளுக்கும் ஏற்ப மரத்துக்கு மரம் தாவ வேண்டிய நிலை ஏற்பட்டு, மனிதனில் இருந்து தான் குரங்குக் பிறந்தனவோ எனவும் எண்ணத் தோன்றுகின்றது. எனவே தற்போது கண்டு பிடிக்கப்பட்ட 7 மில்லியன் வருட பழமையான மண்டையோடு பழைய கொள்கைகள் எல்லா வற்றையுமே பிழையென நிரூபித்தது மாத்திரமன்றி, மனிதனின் பிறப்பை மிகவும் சிக்கலாக்கி விட்டது. இதைக் கண்டுபிடித்த Brunet உம் குழுவினரும், மேலும் இந்த Chad என்னும் இடத்தில் அகழ்வு வேலைகளில் ஈடுபட்டுள்ளார்கள். சாதாரணமாக ஒன்றைக் கண்டெடுத்த பின்னர் அதுபற்றிய தகவல்களை வெளியிட பல மாதங்கள் எடுக்கும். எனவே இவர்கள் ஏற்கனவே வேறு தகவல்களையும் பெற்றுள்ளார்களா என்பது பற்றித் தெரிய வில்லை. எனவே இன்னும் சில காலத்தில் மேலும் சுவாரசியமான தகவல்கள் கிடைக்கும் என எதிர்பார்க்கலாம்.

* * * * * *

"அறிவும் ஆக்கமும்" பற்றிய உங்கள் கருத்துக்களையும் நீங்கள் எவ்வகையான விடயங்களைக் இக் கட்டுரையில் எதிர் பார்க்கிறீர்கள் என்பதையும் விஜே குலத்துங்கம், 361 Highglen Ave., Markham, Ont., L3S 3M2 என்ற முகவரிக்கு அல்லது wijeyalku@hotmail.com என்ற முகவரிக்கு அனுப்பவும்.


நூற்றுக்கணக்கான டொலர்கள் பெறுமதியான செயற்கை மருந்துக்களுக்கு இலக்காகி மேலும் உங்கள் அழகிய முடியை இழந்துவிட்டீர்களா?
**கவலையை விடுங்கள்**
கனடிய சுகாதார அமைச்சின் அங்கீகாரம் பெற்று இயற்கை மூலிகைகள் கொண்டு தயாரிக்கப்பெற்ற



**Vitaplex**
**சம்போ அன்ட் கன்டிஷனர்**
உங்கள் மனக்கவலையை நிவர்த்தி செய்கின்றது.



Vitaplex Shampoo $9.99
Vitaplex Conditioner $9.99
Vitaplex Shampoo Plus Conditioner $18.99
Applicable Taxes Extra

**கிடைக்கும் இடங்கள்**
ரொரன்ரோ, ஸ்காபரோ, மிஸ்ஸிஸாக எதோபிக்கோ மற்றும் மொன்றியாலில் அநேக தமிழ் வர்த்தக நிலையங்களில் கிடைக்கின்றது.


**YARLCAN**
**STEAM CLEANING**
உங்கள் சகலவிதமான Cleaning தேவைகளுக்கும் அழையுங்கள்-



* DUCT CLEANING
* CARPET CLEANING

மோகன்: (905) 887-7436 Cell: (416) 721-9709

கனேடிய தமிழர் வர்த்தக சம்மேளத்தினரின்
**விருது பெற்ற**
**VIVEKA PRINTERS**
உங்கள் அச்சுவேலைகள் எதுவாக இருந்தாலும்



முதலில் நீங்கள் நாடவேண்டிய இடம்
80 BARBADOS BLVD., UNIT #4 SCAR., ONT.
**416-410-6401**

# APPLEMORE AUTOMOTIVE

Apple Apple Apple

உட்புற, வெளிப்புற திருத்த, பராமரிப்பு வேலைகளுக்கு என்றும் உங்கள் மத்தியில்

- Detailing
- Motor Shampoo
- Interior Shampoo
- Exterior Wash
- Waxing





- Repairs
- Safety Certification
- Overall Maintenance
- Under Coating
- Rust Proofing

ONTARIO'S DRIVE CLEAN
Accredited Test & Repair Facility

**Tel: (416) 285-4998**

**2500 Lawrence Ave. East, Unit #11, Scarborough, ON**




Apple Apple Apple Apple Apple Apple Apple Apple Apple Apple Apple



RAJ works

Tel: 416-993-9709
416-288-1103

**For All Your Repair And Plumbing Needs!**

- Stringhopper
- Cocount machines
- Plumbing
- General repairs


## கலந்துரையாடல்

* இலங்கை பற்றிய இந்திய தமிழ்த் திரைப் படங்கள்
(நந்தா, புன்னகை மன்னன், தெனாலி, காற்றுக்கென்ன வேலி, கன்னத்தில் முத்தமிட்டால்.....)

* அண்மையில் காலமான "சதங்கை" ஆசிரியர் வனமாலிகையும், சிறந்த படைப்பாளியான அசுரர் குமார் மூர்த்தியும் இக்காட்டத்தில் நினைவு கூறப்படுவார்கள்.

காலம்: ஆகஸ்ட் 10, 2002 சனிக்கிழமை சனிக்கிழமை மாலை 4 மணிக்கு
இடம்: Mid Scarborough Community Ctr.
(Kennedy Subwayஇற்கு அருகாமையில்)
இலக்கிய அகவி வட்டம்
தொடர்புகட்கு: Rathan@pathcom.com Kavitha2@Aol.com

## உ ணர்ச்சிக் கவிஞர் காசியானந்தனின் தாயார் காலமானார்

கவிஞர் காசி ஆனந்தன் அவர்களின் தாயார் காத்தமுத்து அழகம்மா அவர்கள் கடந்த புதன்கிழமை (24-07-2002) அன்று தென் தமிழீழத்தில் காலமானார். அன்னாரது இறுதிச் சடங்குகள் இன்று வியாழக்கிழமை (25-07-2002) அவரது சொந்த ஊரான மட்டக்களப்பு மாவட்டம் அமிர்தகழியில் இடம்பெற்றன. இவ்விறுதிச் சடங்குகளில் தமிழீழ விடுதலைப் புலிகளின் மட்டு - அம்பாறை அரசியற்துறைச் சிறப்புப் பொறுப்பாளர் கரிகாலன், சக போராளிகள் மற்றும் பொதுமக்களும் கலந்து கொண்டு இறுதி மரியாதை செலுத்தினர்.

தகவல்: காசி ஆனந்தன்
தொலைபேசி: 91-44-492-5512


# ஞானம்ஸ் ஸ்ருடியோ

**Introducing 1 Hour Photo Lab: 3x5 & 8 x 12**
**Professional Photographer - கதிர் 416.750.8118**
2381 Eglinton Ave., E .Kennedy / Eglinton, Scarbo.




14 வருடங்களாக தமிழர் மத்தியில் நன்மதிப்பைப் பெற்ற

# யோகாஸ்

(416) 267-0408


## குறுக்கு எழுத்துப் போட்டி இல. 133




**இடமிருந்து - வலம்**

1. செல்வம்
3. உணவுவேட்கை (வல - இட)
4. மதுரையை எரித்தவள் (வல - இட)
5. ஏங்கு (வல - இட)
6. நீண்ட காய் காய்க்கும் மரம்
7. பக்குவம் (வல - இட)
9. இறந்தோருக்கு செய்யும் நீர்க்கடன்
11. இறந்தோரின் ஆன்மா
12. கருமை

**மேலிருந்து - கீழ்**

1. ஒற்றுமை
2. பல்லக்கு
5. முனிவர் (கீழ் - மேல்)
6. விலாசம் (கீழ் - மேல்)
7. பனையில் இருந்து எடுக்கப்படுவது
8. ஒரு நரம்புக் கருவி
10. அனேகர்
11. வெட்டு

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| ஏ | ற | க் | கு | றை | ய | | உ |
| ற் | | | ரு | | | | வ |
| று | ண | கி | | த | ண் | டி | கை |
| க் | | ண் | க | | | ப | |
| கொ | | கி | ண் | ண | ம் | | பா |
| ள் | | ணி | | | த | வி | ர் |
| | க | | ஆ | | ரி | | வை |
| ப | ரு | த் | தி | த் | து | றை | |

சரியான விடைகளில் இருவர் குலுக்கல் மூலம் தெரிவு செய்யப்படுவர். இவர்களுக்கு "யோகாஸ்" இல் பாவிக்கக்கூடிய $15, $10 Gift Certificates வழங்கப்படும். இதற்கு cash value கிடையாது. விடைகள் AUGUST 25, 2002க்கு முன்னர் விளம்பரம் முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

**132இல் வெற்றி பெற்றோர்**

1) நளாயினி S., Donmills, Ont.
2) Haran K., Scarborough, Ont.


* ஆட்டிறைச்சி வியாபாரத்தில் தமிழ் மக்களின் உள்ளங்களை வென்றவர்!

* அன்றாட சந்தையில் மரக்கறி, மீன் வகைகளை தினமும் தருவித்துக் கொடுப்பவர்கள்.

* வாடிக்கையாளர்களின் தொகையில் உயர்ந்தவர்!

**733 kennedy Road**
**[Ken-Mark Plaza]**



# தமிழ் நாட்டில் பிரயாண சேவை

தமிழ்நாட்டில் சென்னையில் தங்குவதற்கு வீட்டு வசதிகளும், சகல இடங்களிற்கு பிரயாணம் செய்வதற்கான வசதிகளும் எங்களால் நியாயமான செலவில் ஒழுங்கு செய்து தரப்படும்.

தொடர்புகளுக்கு: 044-621-0294, 98410 - 94459
253 M.T.H. Rd. Asion Garden, #201 Villivakkam, Chennai

# கனடிய பாடசாலை - கல்வித்திட்டம்
# EDUCATIONAL INFORMATION



சென்ற இதழில் தரம் 8இல் சிறப்புப் புலமைச் சித்திகள் பெற்ற மாணவர்களான செல்வன் சபீர் முக்தாரையும் செல்வி பிரபாகினி யோகநாதனையும் பாராட்டி அவர்களின் திறமைகளை வெளிப்படுத்தி இருந்தோம். எமது விருப்பத்திற்கு இணங்கி அனுமதியும் ஒத்துழைப்பும் வழங்கிய இவ்விரு மாணவர்களது பெற்றோருக்கும் நன்றியை தெரிவித்தபடி, இவ்விதழில் புலமைச் சான்றிழ்களையும், கேடயங்களையும் தட்டிப் பறிக்கும் திறமைகளை எவ்வாறு மாணவர்களிற்கு தெரியப்படுத்துவோம் என்பது பற்றிய பொதுக் கருத்துக்களை கவனிப்போம்.

கனடாவைப் பொறுத்த அளவில் இங்கு உள்ள தமிழ் பெற்றோர்கள் கல்வியறிவு உடையவர்களாக இருந்தும் கூட, தங்களது பிள்ளைகளின் கல்வி விடயங்களை கவனிப்பதில் பெரும் பாலானோர் பெரும் சிக்கல்களிற்கு உள்ளாகி விடுகிறார்கள். இச் சிக்கலைப் பொதுப்படக் கூறின் நேரத்தட்டுப்பாடு என்கிற ஒரே ஒரு காரணமாகி விடுகிறது. மாணவர்களிற்கும் பெற்றோருக்கும் இடையில் உறவு முறைக்குக் கூட நேரம் இல்லையே என்று தவிக்கும் சூழ்நிலையில் இன்றைக்கு ஏராளமான குடும்பங்கள் இந்நாட்டில் இருக்கின்றனர். இப்படி இருக்கும் போது கல்வி விடயங்களை கவனிப்பது என்பது அதிசிரமமான விடயமாகி விடுகிறது. எது எவ்வாறு இருப்பினும் ஒவ்வொரு பெற்றோரும் தங்களது பிள்ளைகளுடன் மிகக் குறைந்த பட்சம் ஒரு மணி நேரமாவது அவர்களோடு சேர்ந்து அவர்களது பாடவேலைகளை நேரடியாக கண்காணிப்பது பல்வேறு வழிகளின் மாணவர்களது வளர்ச்சிக்கு உதவியாகி விடுகிறது. இதுவே பெற்றோர் கவனிக்கின்ற முக்கிய முதற் படியாகி விடுகிறது. மாணவர்களோடு பெற்றோர் செலவு செய்யும் இந்த ஒரு மணி நேரத்தை மிகக் கண்ணும் கருத்துமாக கவனிப்பது அவசியம். அதாவது அக் குறிப்பிட்ட நேரத்தில் பிள்ளைகளுக்கு பக்கத்தில் இருந்த வண்ணம், தொலைபேசியில் பதில் கூறுவது, தொலைக்காட்சி பார்ப்பது, சமைப்பது, பத்திரிகை பார்ப்பது, வானொலி கேட்பது என்று ஏராளமான ஏனைய விடயங்களை கவனிப்பது முற்றாகவே தவிர்க்கப்பட வேண்டும். நூறு வீதம் மாணவர்கள் என்ன செய்கிறார்கள் என்று மிக அருகில் இருந்து கவனிப்பதோடு முடிந்த அளவு அவர்களது வேலைகளை பாராட்டிப் பேசிக் கொள்வதும் முக்கியமாகி விடுகிறது. இவ்வாறு அவர்களைப் பாராட்டுவது அவர்களை மேன்மேலும் ஊக்குவிப்பதுடன் படிக்கின்ற ஆர்வத்தையும் ஏற்படுத்தி விடுகிறது. குறிப்பிட்ட அவ்வேளையில் தொலைபேசியினைத் தவிர்ப்பது தொலைக்காட்சியை நிறுத்துவது என்று பல்வேறு காரணங்களை அவர்களுக்காக நிறுத்தப்படுகிறது என்பதனை பிள்ளைகள் உணர்வது போன்று அக்காரியங்களை செய்வது முக்கியம் ஆகும். அவர்களது மனநிலையில் தங்களைப் பெரிதுபடுத்தி இவற்றை அம்மா, அப்பா தங்களுக்காக எல்லாம் செய்கிறார்கள் என்று உணர்த்துவது அவர்களை சிறுகசிறுகச் சிந்திக்க வைத்து விடும். முற்றுமுழுதாக அவர்களோடு உட்காரும் சமயம் அவர்களது பாடப் புத்தகங்களை உற்று நோக்குவதும், அவர்களது வேலைகளை புரட்டிப் பார்ப்பதும் அது சார்பாக சில விமர்சனங்களை ஏற்படுத்துவதும் மாணவர்களை (பிள்ளைகளை) பெரிதும் ஊக்கப்படுத்தி விடும். நமது நாட்டு பாரம்பரிய முறைகளை மேற்கொள்வது முற்று முழுமையாக வெற்றியீட்டாது என்பது பொதுவாக அனைவரும் அறிந்ததொன்று என்பதால் வலுகட்டாயப்படுத்தி அவர்களை படிப்பில் ஈடுபடுத்துவது சில சிரமங்களை ஏற்படுத்தவே செய்யும். எனவே இவ்வாறான முறைகளையே பெற்றோர் கவனிப்பது சிறந்ததாகிறது. அத்தோடு மாணவர்களுக்கு மிகமுக்கியமாக மொழிப் பாடங்களான ஆங்கிலம், தமிழ் இவற்றை எந்நேரத்திலும் எக்காலத்திலும் இடைவெளி இன்றி போதிக்கலாம். ஏழு எட்டு வயதுக் குழந்தைகள் பல மொழிகளை ஒரே நேத்தில் பயிலும் ஆற்றல் உடையவர்கள் என்று பல்வேறு ஆய்வுகள் கூறுகிறது. எனவே ஆங்கிலத்தையும் தமிழையும் கலந்தால் பிள்ளைகள் படிக்காமல் போயிடுவர் என்ற குற்றச்சாட்டு அவசியமற்றது. இந்த விடுமுறை நாட்களில் மொழியினை வளர்ச்சி செய்யும் முகமாக வாசித்தல், எழுதுதல் போன்ற பயிற்சிகளை இவ்வாறு நேரக் கட்டுப்பாடோடு செயற்படுத்துதல் நிச்சயமாக பலனை அளிக்கும். இத்துடன் ஒரு நாளைக்கு ஐந்து சொற்கள் என்ற அடிப்படையில் எழுதிக் காட்டுதல், கருத்து, உச்சரிப்பு என்று ஒரு பட்டியலைத் தயாரித்தால் விளையாட்டு விளையாட்டாக ஆவணி மாதம் மாத்திரமே 150 சொற்கள் தயாரிவிடும். ஆகவே பெற்றோரின் முயற்சி பிள்ளைகளை நிச்சயம் நெறிப்படுத்தும் சாதனம் என்பதனை செயற்படுத்தி உணர்ந்து கொள்ளுங்கள்.

இதைவிட கணித பாடத்தினையும் பெற்றோர் முன் ஏற்பாடாக எவ்வளவு வேண்டுமானாலும் கற்றுக் கொள்ளலாம். புரட்டாதி மாதம் ஆரம்பாகவிருக்கும் புதிய வகுப்புகளிற்கான பாடநூல்கள் கையில் இல்லையே என்று கவலைப்படாமல் அவ்வகுப்புகளிற்கான கணித நூல்களை நூல் நிலையங்களில் சென்று ஆராய்ந்தால் நிச்சயம் கிடைத்துவிடும். இதனை அடிப்படையாக வைத்து அவர்களை கணித பாடத்திலும் இடைவிடாத பயிற்சியினை வழங்கலாம். மாணவர்களது ஆற்றலுக்கு மேல் அதிக வேலைகளை வழங்குவது அவர்களை பாதிக்கும் என்று சிலர் கருதுகிறார்கள். ஆனால் இதுவரை அவ்வாறான ஆய்வுக் கட்டுரைகள் வெளிவந்ததாகத் தெரியவில்லை.

மொழி, கணிதம் இவற்றைத் தவிர வேறு பாடங்களில் மாணவர்களை ஊக்குவிப்பதாக இருந்தால் அது அவர்களது ஆர்வத்தை அடிப்படையாகக் கொண்டதாக இருக்க வேண்டும். மின்இயல், சித்திரம், இசை என்று அவரவர் ஆர்வத்துக்கு ஏற்ப அத்துறைகளை மேன்மேலும் அவர்கள் வளர்க்கும்படி வசதி செய்து கொடுப்பது மாணவர்களை ஏதோ ஒரு விடயத்தில் மேதாவியாக்கிவிடும் என்பது உண்மையாகி விடும்.

சர்மா (சரவணபவ சர்மா)

**பொது அறிவுக் குறிப்புகள்**

* டார்மின்கான் எனும் காட்டுக் கோழி முட்டையிட்டவுடன் முட்டையின் நிறம் இரத்த சிவப்பாக இருக்கும். பிறகு வெளிச் சூழல்களுக்கேற்ப சிறிது நேரத்திற்குள் கறுப்பாக மாறிவிடும்.



J.A.B. TRAVELS & TOURS

Top Sales Award for Cathy pacific

ஆசிய - ஐரோப்பா - அவுஸ்ரேலியா - வடமத்திய - தென்அமெரிக்க - உலகின் சகல பாகங்களிற்குமான ரிக்கற் வசதிகளுக்கு நாடவேண்டிய இடம்
J.A.B TRAVELS & TOURS.

1185 DUNDAS ST. E., # 203 MISSISSAUGA ONT.
(905) 896-8320

யோகா சோதிடம்



* கிரகப் பொருத்தம் பார்த்தல்
* சுபமுகூர்த்தம் கணித்தல்
* சாதகக் குறிப்புக் கணித்தல்
* பலன் பார்த்தல்

416-299-8361

SAFETY TRUCKS
Training School Ltd.

Training & Trucking Classes A, D & Z
கனடாவில் ஆரம்பிக்கப்பட்ட முதலாவது தமிழ் Truck DRIVING பயிற்சி இடம் (8ஆம் ஆண்டு) வாரத்தில் ஏழு நாட்களும் பயிற்சிகள் வழங்கப்படும்
We Accept Welfare & Unemployment Insurance




* தமிழ் மொழி மூலம் அனைத்துப் பயிற்சிகளும் தனித்தனியாகக் கொடுக்கப்படும்.
* One On One Training
* அனுமதிப்பத்திரத்திற்கு (License) உத்தரவாதம் அளிக்கப்படும். வேலை எடுப்பதற்கும் உதவிகளும் ஆலோசனைகளும் வழங்கப்படும்.

In Classes
* 365 (Learning Permit)
* Lock Books
* Air Brake (Z)
* Dangerous Goods
* Border Crossing
* Defensive Driving Course

சிறந்த பயிற்சி பெற அழையுங்கள்
YOGAN SOCKALINGAM
Truck Driving போதனாசிரியர்
(15 Years Canadian Experience with Trucks)
(905) 793-9546 / (416) 616-5979
250 Summerlea Road, Brampton, Ont.

# விண்வெளி



கனி



**அந்நியர்கள் - Aliens**

Rosewell விவகாரம், Area 51 இன் பெரும் பாதுகாப்பும் இரகசியச் செயற்பாடுகளும் ufo ஆய்வாளர்களை பற்பல கேள்விகளை எழுப்பச் செய்தது. அதன் விளைவாக சில அந்நியமான முடிவுகளுக்கு அவர்கள் வந்தார்கள். அவர்கள் என்ன கூறுகின்றார்கள் எனப் பார்ப்போம்.

1947ஆம் ஆண்டு யூலை 7ஆம் திகதி இரவு Rosewell பகுதியில் ufo இற்களின் விபத்து ஒன்று பாரதூரமாக நடை பெற்றுள்ளது. அவ்விபத்தின் காரணமாக ஏலியன்கள் சிலர் நமது சொந்த பூமியில் காயமுற்று விழுந்தார்கள். பழுதடைந்த தமது விண்கலத்தை இயக்க முடியாமல் அநாதரவாக நின்ற ஏலியன்கள் அமெரிக்க இராணுவத்தினரிடம் அகப்பட்டுக் கொண்டார்கள். எத்தனை ஏலியன்கள் அகப்பட்டுக் கொண்டார்கள் என்பது தெரியவில்லை. இறந்தவர்கள் போக காயப் பட்டவர்களை ஏதோ விதத்தில் குணப்படுத்தி இருக்கலாம் அல்லது சிறு காயத்துக்குள்ளானவர்கள் இலகுவில் குணப்படுத்தப்பட்டு இருக்கலாம் என்பது அவர்களது கருத்து.

அக்காலத்தில் அமெரிக்கர்கள் விண்வெளிக்கு செல்வதற்கான முயற்சிகளை எடுத்துக் கொண்டிருந்த காலம். எனவே அகப்பட்ட ஏலியன்களுடன் சிறு போம் பேசி அவர்கள் பூமியில் இருந்து செல்வதற்கான உதவிகளைச் செய்திருக் கின்றார்கள். அதற்குப் பதிலாக தமது விண்வெளி பயணத்தின் செயற்பாடு களுக்கான யுக்திகளை உதவிகளை அவர்களிடம் இருந்து பெற்றிருக் கின்றார்கள். அந்த உயர் தொழில்நுட்ப அறிவின் உதவியுடன் தான் அமெரிக்க நீல் ஆம்ஸ்ரோங் முதன் முதலில் சந்திரனில் காலடி எடுத்து வைத்தார். இந்த ஏலியன்களின் உதவி இவ்வாறு இருந்திருப்பின் விண்வெளிப் பயணமும் சந்திரனில் காலடி எடுத்து வைப்பதும் இன்றும் கொஞ்சக் காலம் தள்ளப் பட்டிருக்கும் அல்லது ஒரு வேளை முடியாமலேயே போய் இருக்கும் எனவும் கூறுகின்றார்கள். மேலும் இறந்த ஏலியன்களின் உடலை பனியில் உறைய வைக்கப்பட்டு இன்னமும் Area 51 இல் பாதுகாப்பாக வைக்கப்பட்டு உள்ளது என்கிறார்கள். அத்துடன் இவ் ஏலியன்களின் உடைந்த விமானம் ஒன்று இப்பகுதியில் இரகசியமாக பாதுகாக்கப் பட்டு அதன் தொழில்நுட்பமானது ஆய்வு செய்யப்படுகிறது என்பதும் இவர்களின் எண்ணம்.

இந்த ஊகங்கள் எவ்வளவு தூரம் சரியானதாக இருக்கும் என்பது தெரியாது. ஆனாலும் அமெரிக்கர்களில் பலர் இதனை சரி எனக் கூறுகின்றார்கள் என்றே நம்ப வேண்டியுள்ளது. காலத்திற்குக் காலம் அமெரிக்காவின் பல சஞ்சிகைகள் இந்த நிகழ்வினை பல கட்டுரைகளின் மூலம் நினைவுபடுத்துகின்றன. பல விண்வெளி எழுத்தாளார்கள் இக்கருத்தினை மைய மாகக் கொண்டு பல கதைகளை, கட்டுரைகளை எழுதியுள்ளார்கள், எழுதி வருகின்றார்கள். பல திரைப்படங்களின் மையக் கருத்தே இந்த ufologist களின் ஊகம்தான். நான் ஏற்கனவே கூறியிருந்த Independence Day என்ற திரைப்படத்தில் Area 51ஆம் இங்கு வைக்கப்பட்டிருக்கும் ஏலியன் விண்கலமும் கருத்தில் கொள்ளப் பட்டுள்ளது. படத்தின் மையக் கதையே Rosewell விவகாரம்தான் என்று கூறலாம். இதைவிட Rose Well எனும் TV தொடர் ஒன்று பரபரப்பாக வெளிவந்தது. இவை எல்லாம் என்னத்தைக் கூறுகின்றன எனில் Rosewell இல் நடந்த விபத்து உண்மையில் ufo இற்களின் விபத்தே என்றும், அவ்விபத்தின் பின்னணியில் உள்ள மர்மங்கள் யாவும் ufo ஆய்வாளர் களின் கூற்றுப்படியேதான் உள்ளன எனவும் அமெரிக்கர்கள் உட்பட உலகில் மக்களும் நம்புகின்றார்கள் என்பதுவுமே ஆகும்.

இச்சம்பவத்தை அறிந்தவர்களும் அதன் பின்னர் அல்லது அதன் பின்னணியில் நடந்தவைகளை அவதானித்தவர்களும் இவை சரி என்று கூறினாலும் நீங்கள் என்ன நினைக்கின்றீர்கள்? விண்வெளிப் பயணம் பற்றிய எமது (மனித இனத்தின்) அறிவு ஒரு இரவல் அறிவுதானா? Rosewell விபத்து நடந்திராது விடின் எம்மால் நமது பூமியைவிட்டு வெளியே ஒரு விண்கலத்தை அனுப்ப முடியாது இருந்திருக்குமா? அப்பலோ, மரீனர், வைக்கின் இவை எல்லாம் அனுப்பப்பட்டிருக்க முடியாதா? என்ன சொல்லுகின்றீர்கள்?






**WINDOW COVERING**

உங்கள் எண்ணம் போல் வண்ண, வண்ணத் திரைச் சேலைகளுக்கு இன்றே அழையுங்கள்.

**BLINDS DRAPERIES AND SHUTTERS**

- ✳ Venetian Blinds
- ✳ Vertical Blinds
- ✳ Roller Shades
- ✳ Pleated Shades
- ✳ Cellular Shades

விபரங்களுக்கு:
என். செல்வம்
**416.332.8482**
**416.419.9247**
**905.201.7733**



இருபத்தேழு வருடங்களுக்கு மேல் அனுபவம் உள்ளவர்களால் உங்கள் வீட்டிற்குத் தேவையான திரைச் சேலைகளைத் தைத்துக் கொடுக்கப்படும்.

FREE ESTIMATE

5210 Finch Ave., E. Unit #3 (Middlefield & Finch)
Scarborough, Ont.

**தமிழர் நிர்வாகத்தில் ஒரு**

**EMBASSY**



**விசா கிடையாது, பாஸ்போட் வழங்கப்படமாட்டாது ஆனால்**

- வீட்டிற்குத் தேவையான தரமான உணவுப் பொருட்கள், (Groceries)
- இலங்கை / இந்திய இனிப்புப் படையல் (Sweets)
- இலங்கை / இந்திய உணவகம் (Restaurant)

சமோசாவிற்கு அழையுங்கள்
416-332-0944
5 SAMOSA -
$1.00

Embassy அமைந்துள்ள இடம்: Finch / Middlefield
5200 Finch Ave., Sacarborough
**416-332-8451**


✳ கூட்டுறவு என்ற சொல்லில் 'கூட்டு' 'உறவு' இரண்டு வார்த்தைகள் அடங்கியுள்ளன. 'கூட்டு' 'உறவு' என்றால் இலாபம் மட்டும் என்றுதான் பொருள்படும். உறவு கூட்டுடன் சேர்ந்தால்தான் தோழமையின் அடிப்படையான இலாபமற்ற நோக்கம் தெளிவாகிறது.


-அறிஞர் அண்ணா


**நான் ஒரு வழக்கறிஞர் இல்லை**

உங்களுக்கு தெரியுமா?

கிறிமினல் குற்றவாளியென தீர்மானிக்கப்பட்டால் உங்கள்

- நிரந்தர வதிவிட உரிமை
- குடியுரிமை
- குடும்ப ஒன்றிணைவு பாதிக்கப்படும்



● CRIMINAL

● ACCIDENT INJURIES

வாகன விபத்தில் பாதிக்கப்பட்டீர்களா? முதலில் வைத்தியசாலைக்கு செல்லுங்கள்



● DOG BITES

● SLIP & FALL

பின் தீசனை அழையுங்கள்






S.K.THEESAN
எஸ்.கே.தீசன்

www.kalakalappu.net

கலகலப்பு தீசன் **416-490-9199**

# அன்புத் தமிழ்



## கற்பு வாழ்க்கை

இளங்கோவடிகள் கோவலன் - கண்ணகி திருமணத்தால் கற்பு வாழ்க்கையின் முக்கியத்துவத்தை வலியுறுத்துகின்றார். அவர் காலத்திலும் அவருக்கு முன்னரும் பலவகையான மணமுறைகள் தமிழர் மத்தியில் நிலவின. காதல் வாழ்வைத் தமிழர் பெரிதும் போற்றினர். தலைவனும் தலைவியும் சந்தித்து, பேசி, பழகிக் காதல் கொண்ட கதைகள் சங்க இலக்கியங்களில் ஏராளம். ஓர் இளைஞன் (தலைவன்) கன்னி ஒருத்தியை (தலைவியை) காணவோ பேசவோ அக்காலத்தில் தடைகள் ஏதும் இருக்கவில்லை. தடைகள் இல்லாத போதும் சந்திப்புகள் பெரிதும் பெற்றோருக்குத் தெரியாமலேயே நடைபெறும். இது களவு எனப்பட்டது. இவ்வித சந்திப்புகள் பூத்தரு புணர்ச்சி, புனல்தரு புணர்ச்சி, களிறுதரு புணர்ச்சி என மூவகைப்படும்.

தலைவி மலர் கொய்யச் செல்கையில் தலைவனைக் கண்டு காதல் கொள்ளின் அது பூத்தரு புணர்ச்சி எனப்பட்டது. குளத்தில் நீர் எடுக்கையில் அல்லது அருவியில் நீராடுகையில் ஏற்படும் சந்திப்புக் காதலாக வளரின் அது புனல்தரு புணர்ச்சியாகக் கருதப்பட்டது. காட்டில் விறகு பொறுக்கச் செல்கையில் அல்லது தினைப்புனத்தைக் காத்து நிற்கையில் யானையைக் கண்டு அலறும் பெண்ணைக் காளையர் காப்பாற்றவதுண்டு. களிறு காரணமாகக் காதல் வளரின் அது களிறுதரு புணர்ச்சியாகக் கொள்ளப்பட்டது. முருகன் வள்ளி காதல் இத்தகைய புணர்ச்சியாகும்.

**கவிஞர் வி. கந்தவனம்**

புணர்ச்சி என்பது உள்ளப் புணர்ச்சி. உள்ளப் புணர்ச்சியின்றிக் காதல் உணர்ச்சி இல்லை. உள்ளப் புணர்ச்சிக்குப் பின்னரே உடற் புணர்ச்சி இடம்பெறும்.

தான்விரும்பும் பெண்ணை மணம் முடிப்பதற்கு ஆடவனுக்கு உரிமை இருந்தது. அது போலவே மகள் விரும்பும் ஆடவனைப் பெற்றோர் அவளுக்கு முடித்து வைத்தனர். சடங்கோடு பொருந்திப் பெற்றோர் தலைவியைக் கொடுப்பத் தலைவன் மணஞ் செய்தல் கற்பு மணம் எனப்பட்டது.

பெற்றோர் திருமணத்துக்குச் சம்மதியாத விடத்து, தலைவி பெற்றோரைத் துறந்து தலைவனுடன் செல்வதும் உண்டு. அது 'உடன்போக்கு' எனப்பட்டது. தலைவன் தனது ஊரில் தலைவியைத் திருமணஞ் செய்து தனிக்குடித்தனம் நடத்துவான். இது 'கொடுப்போர் இன்றியும் கரணம் உண்டே' (பொருள் 143) என்னும் தொல்காப்பியர் கூற்றால் தெரியவருகின்றது.

பெற்றோரும் உற்றாரும் அறியாது நடக்கும் களவு வாழ்வு, நெடுங்காலமாக ஏற்றுக் கொள்ளப்பட்டு வந்தததாயினும் காலப் போக்கில் அது மதிப்பு இழக்கத் தொடங்கியது. இந்த வாழ்க்கை முறையில் தலைவன் வாக்குத் தவறுதல், உடற் புணர்ச்சியின் பின் தலைவன் தலைவியைக் கைவிடுதல் போன்ற நேர்மையீனங்கள் மலிந்து சமூக உறவைப் பாதித்ததால் கற்பு மணம் தோன்றலாயிற்று.

பொய்யும் வழுவும் தோன்றிய பின்னர்
ஐயர் யாத்தனர் கரணம் என்ப (பொருள் - கற்பு 4)

என்னும் தொல்காப்பிய அடிகள் கற்பு மணம் பிரபலியமானதற்கான காரணத்தை விளக்குகின்றது. கரணம் என்பது சடங்கு. சடங்கில் பெரியோர்கள் தம்பதிகளுக்கு வாழும் வகைபற்றி அறிவுறுத்துவர். தலைவன் தலைவியைப் பிரியாது இருக்க வேண்டும், தலைவி தலைவனைப் பேணவேண்டும் என்றெல்லாம் கற்பிப்பர். அதனாலேயே இது கற்பு மணம் எனப்பட்டது. பெரியோர் திருமணத்தின் போது சொன்ன சொல்லைக் கடைப்பிடித்து வாழ்தலே கற்பு. இதனாலேயே 'கற்பெனப்படுவது சொற்றிறம்பாமை' என்றார் அவ்வைப் பிராட்டியார்.

சொல் திறம்பாமை ஆண் பெண் இருபாலார்க்கும் பொது. ஆயினும் திறம்பாமைக்கு மிகுந்த மனத்திடம் வேண்டும். 'கற்பெனும் திண்மை' என்கிறார் வள்ளுவர். திண்மை - மனத்திடம். இந்த மனத்திடம் பெண்களுக்கே அதிகம் என்பதனைச் சிலப்பதிகாரம் காட்டுகின்றது. கோவலன் திறம்பினான். கண்ணகி திறம்பவில்லை. கற்புக்கு ஒரு சக்தி உண்டு. அந்தச் சக்தியால் மதுரையை எரித்தாள் கண்ணகி.

பட்டாங்கு யானும் ஒரு பத்தினியே ஆமாகில்
ஒட்டேன் அரசொடு ஒழிப்பேன் மதுரையும்

என்பது அவளின் வஞ்சினம்.

தெய்வம் தொழாஅள் கொழுநன் தொழுதெழுவாள்
பெய்யெனப் பெய்யும் மழை

என்று வள்ளுவரும் கற்புக்கு இருக்கக் கூடிய சக்தியை வலியுறுத்துகிறார்.

கண்ணகிக்கு முன்னரும் அருந்ததி, ஆதிமந்தியார் முதலாய கற்பரசிகளின் கதைகள் தமிழ் மக்கள் மத்தியில் பெரிதும் வழங்கப்பட்டு வந்ததெனனும், கண்ணகி கதையே கற்பு வாழ்க்கையின் மகத்துவத்தை ஊன்றி வலயுறுத்தியது எனலாம். கண்ணகி கற்பு தமிழர் பண்பாட்டின் உயிர் நாடியாகிவிட்டது. ஒருவனொடு மட்டும் உறவு வைத்துக் கொள்ளும் உறுதிப்பாடு அல்லது பிறர் மனம் புகாத பெற்றி மங்கையரின் தலையாய ஒழுக்க நெறியாயிற்று. ஒருவனுக்கு ஒருத்தி என்னும் கட்டுப்பாட்டுக் கொள்கை இல்லறத்தை இணையற்ற முறையில் வளர்த்தெடுத்தது.

இளங்கோ பரத்தையர் குலத்தில் தோன்றிய மாதவியை கற்பவதியாகப் படைத்திருப்பதைப் பார்க்கிறோம். ஆண் பெண் உறவில் ஒரு கட்டுப்பாடு இருத்தல் வேண்டும் என்பது அவரது கருத்து. பாலியல் உறவில் விலங்குகள் காட்டும் கட்டுப்பாடு அதிகம். மனிதர் பலர் விலங்குகளிலும் கேவலமாக நடக்கின்றார்கள். கட்டுப்பாடு இல்லாத உறவினால் பாலியல் நோய்கள் பல பரவி இன்ப வாழ்வுக்குச் சாவு மணி அடித்துக் கொண்டிருக்கின்றன இக்காலத்தில்.

எமது முன்னோர் வெள்ளம் வரமுன்னரே அணையைக் கட்டிவிட்டார்கள். கற்புநெறி தமிழ் மக்களின் இல்லற வாழ்வைக் காப்பாற்றி வருகின்றது.

✻ நீங்கள் யாருடனும் நட்புறவு கொண்டாள் வாழ்நாள் முழுவதும் அது நீடிப்பதாக இருக்க வேண்டும். சந்தர்ப்பத்துக்காக சுயநலத்துக்காக ஒருவருடன் தொடர்பு கொள்வது நட்பு ஆகாது.

✻ தன்னுடைய நிலையில் தாழ்வு வராமல் தற்காத்துக் கொள்வதற்குத்தான் பெருமை என்று பெயர்.


BPR RENOVATION




* NEW BSMT
* DRY WALL
* PLUMBING
* ELECTRICAL
* PAINTING

இலவச மதிப்பீடு செய்து கொடுக்கப்படும்.

உங்கள் சகலவிதமான திருத்த, நிர்மாண வேலைகளையும் குறித்த நேரத்தில் செய்து கொள்ள அழையுங்கள்:

சந்திரன்: 416-431-6806 Cell: 416-829-7955

தமிழ் மக்களின் நெருங்கிய நண்பர்

ரவி நடராஜா

Accident & Traffic Ticket

(14 Years Insurance Claims Experience)



* வாகன விபத்துக்குள்ளாகியவரின் இழப்பீடு பற்றிய தகுந்த ஆலோசனைகள் வழங்கப்படும்.
* உரிய இழப்பீடுகள்
* மற்றைய இழப்பீடுகள்
* விபத்துக்குள்ளாகியவரின் சம்பள இழப்பீடுகள் மற்றும் வாகன விதி முறைகளை மீறிய குற்றங்கள்

(416) 245-6555 2095 Weston Road, Suit 203, Toronto, Ont.
(416) 755-2801 2390 Eglinton Ave., E. Suite 223, Scar.


**விடுகதைகள்**

1. கல்லாலும் மண்ணாலும் கட்டப்படாதவீடு. காற்றிலே ஆடும் வீடு. கதவில்லா வீடு அது என்ன? தூக்கணாங்குருவிக் கூடு.
2. உண்டதை நினைப்பான். உதையை மறப்பான். உயிரைக் கொடுப்பான். வழியும் நடப்பான். அவன் யார்? நாய்



NEW Technology
Security and Sound Inc.





BODY KIT
CUSTOM SINGS TINT
CUSTOM INTERIOR
PERFORMANCE PARTS
RIMS AND TIRE
CAR ALARM AND REMOTE STARTER
INSTALLATIONS
MOBIL VIDEO DVD
CAR AUDIO




6 MONTHS NO PAY-MENT NO INTEREST



MUCH MORE....

Shanger

Tel: 416-335-4070 cell: 416-451-4517

Fax: 416-335-9936 www.newtechno.net

3501 Mcnicoll Ave. Unit 9, Scarborough, Ont., M1V 2N3

## தமிழ் மாணவ மாணவிகளே இடத்திற்கு முந்துங்கள்!

## கணனிச் செயல் முறைக் கருத்தரங்கு

## (Computer Programming Seminar)

## பிரவேசம் இலவசம்

தமிழ் மாணவர்களின் கணனிச் தொழில் நுட்ப ஈடுபாட்டினை ஊக்குவிக்கும் பொருட்டு கனடா இலங்கைப் பட்டதாரிகள் சங்கம் கனடாவிற் கல்வி பயிலும் உயர்தர பாடசாலை மாணவ மாணவிகளுக்கு (வகுப்பு 10 - 13) கணனிச் செயல் முறைக் கருத்தரங்கு ஒன்றை நடாத்த ஒழுங்கு பண்ணியுள்ளது. இதிற் கலந்து ரெகள்வதற்கு ஒரு கட்டணமும் கிடையாது. கனடாவில் 10 - 13ஆம் வகுப்புகளில் பயிலும் மாணவர்கள் இதிற் கலந்து கொள்ளலாம்.

இக் கருத்தரங்கு ஆகஸ்ட் 18ஆம் திகதி சனிக்கிழமை காலை 9 மணி முதல் பிற்பகல் 2 மணி வரை 150 Borough Drive இல் உள்ள ஸ்காபரோ சிவிக் நிலையத்தில் உள்ள Council Chamber இல் நடைபெறும். அஜின்கோட் உயர்கல்லூரிக் கணனிக் கல்வித் தலைவர் Gordon Mckechnie இன் பிரதான உரையுடன் ஆரம்பமாகும் இக் கருத்தரங்கில் அதீதன் தனஞ்செயன் (Chief Programmer, More Business Communications, Toronto) அவர்களின் விசேட உரையுடன் வாட்டலூ பல்கலைக்கழகப் பட்டதாரிகள் பலரும் பல்கலைக் கழகக் கணினித்துறை கணினித்துறை மாணவர்கள் [illegible]ம் இதில் கலந்து ஏராளமான பிரயோசனமான தகவல்களைத் தருவார்கள். குறிப்பிட்ட ஆசனங்களே உள்ள படியால் முன்கூட்டியே பதிவு செய்யும் படி கேட்டுக் கொள்கிறோம். பதிவு செய்வதற்குப் பின்வரும் மின்னஞ்சல் மூலமோ தொலைபேசி மூலமோ தொடர்பு கொள்ளலாம்.

asgc.ca manni_vannan@yahoo.com
சி. இராமநாதன்: 419-438-2949 (பி.ப 6 மணிக்குப் பின்னர்)
கலாநிதி மணிவண்ணன்: 416-609-1998 (பி.ப 6 மணிக்குப் பின்னர்)
கலாநிதி தெய்வேந்திராஜா: 419-335-3453 (பி.ப 6 மணிக்குப் பின்னர்)

## J DAYCARE



* மாதம் தொடக்கம் 6 வயதுச் சிறார்களுக்குச் சிறந்த பராமரிப்பு
* ECE தகுதி பெற்ற நடத்துனர் * TAX RECEIPT வழங்கப்படும்
* காலை 7:00 மணி - மாலை 6:00 மணி வரை
* மாலை 6:00 மணி - மாலை 10:00 மணி வரை
* சனி, ஞாயிற்றுக் கிழமைகளிலும் பிள்ளைகள் பராமரிக்கப்படும்

1 Hr. - $3.00
Day - $15.00
Week - $60.00

**தினசரி நடவடிக்கைகள்**

* உள்ளக, வெளியக, விளையாட்டுக்கள், தமிழ் ஆங்கிலம் படிப்பித்தல், இரு நேர உணவு வெளிப்புறச் சுற்றுலா

தொடர்புகளுக்கு:
Mrs.S.J. சௌந்தரநாயகம்

151 Lamareaux Dr., TownHouse 99A (Finch / Birchmount) **416-502-3033**

## திருமண சேவை



உங்கள் விருப்பத்திற்கேற்ப மணமகன், மணமகளைத் தெரிவு செய்ய சாதகக் குறிப்புடன் தொடர்பு கொள்ளுங்கள். எமது சேவையின் பலனைப்பெற்ற தம்பதிகள் பலர். உலகெங்கும் பரந்து தொடர்புகள் குன்றி வாழும் எம்மவர்களின் தேவையே எமது சேவை.

**416 261-6219**

Email: ratnm51@hotmail.com

WEEKLY AFTER 6:00PM / WEEKENDS ANYTIME

## தமிழில் இலவச சேவைகள்!!!

ரொறன்ரோவில் உள்ள பல்லின கலாச்சார குடிவரவு சமூக நிலையம் பின்வரும் சேவைகளை தமிழில் வழங்குகின்றது.

* குடிவரவாளர்களுக்கு வேண்டிய உதவி:
  நிரந்தர குடியுரிமைப் பத்திரம் பெறும் வழிமுறைகள்.
  குடும்பத்தினரைப் பொறுப்பேற்றல்.
* இலவச ஆங்கில வகுப்புகள் - (கணினியுடன்) நிலைகள்: 1 - 2 -3 - 4 - 5
* சமூகநல, குடும்பநல உதவி பெறுவோர்க்கான உதவியை செய்தல்.
* தொழில், மற்றும் உயர்கல்வி சம்பந்தமான ஆலோசனை வழங்குதல்.
* சுகாதாரம், சட்டம், வீட்டு வசதி போன்ற துறைகளில் ஆலோசனை வழங்குதல்.
* மொழி பெயர்த்தல் மற்றும் விண்ணப்பங்கள் நிரப்பிக் கொடுத்தல்.
* மற்ற நிறுவனங்களுடன் தொடர்பு கொண்டு அங்கத்தினருக்கு வேண்டிய உதவிகள்.

மேலதிக விபரங்களுக்கு: சியாமளாவுடன் **416-261-4901 / 416-261-1380**

என்ற இலக்கங்களில் பின்வரும் சேவை நேரங்களில் தொடர்புகொள்ளவும்:
செவ்வாய் முதல் வெள்ளி வரை: காலை 9:00 மணி முதல் பிற்பகல் 4:00 மணி வரை

**எங்கள் அலுவலக முகவரி:**
பல்லின கலாச்சார குடிவரவு சமூக நிலையம்
(Polycultural Immigrant & Community Service)
3178 எக்லிண்டன் அவென்யு கிழக்கு #206 (முதல் மாடியில்)
(மார்க்கம் & எக்லிண்டன் சந்திப்பு)



## வாகன விபத்தில் காயமடைந்துவிட்டீர்களா?

**UNITED**
PERSONAL INJURY ASSOCIATES
*The Car Accident People*
ஒன்ராறியோவின் மிகப்பெரிய ஸ்தாபனம்

அனுபவசாலியின் ஆலோசனை பெற்றபின் உங்கள் முடிவை எடுங்கள்

**கனடாவில் 30 வருடத்திற்கும் மேலான அனுபவம்**

**உங்களுக்குத் தெரியுமா?**
நடந்த விபத்து உங்கள் தவறில்லாவிடின் உங்களால் $172,000.00 வரை இழப்பீடாகப் பெறமுடியும். அத்துடன் இதனால் ஏற்படும் வலி, வருத்தம், வேலை இழப்புப் பணம், வாழ்வில் இழந்த மகிழ்ச்சி மற்றும் பல்வகையான இழப்புக்களுக்கு நஷ்டஈடாகப் பல்லாயிரம் டொலர்கள் வரையில் பெறமுடியும்.

**விபத்து உங்கள் தவறானாலும் கூட**
உங்களால் $ 172,000.00 டொலர் வரையும் வருமான இழப்பீடாக வாரத்திற்கு $400.00 வரையும் இன்னும் பலவகை இழப்பீடுகளையும் பெறமுடியும்.

உடல்ரீதியாகவோ அல்லது உளரீதியாகவோ பாதிக்கப்பட்டிருப்பின் இன்றே அழையுங்கள்
**யுனைட்டெட்**

பண இழப்பீட்டுத் தீர்வு மற்றும் காப்புறுதி நிறுவனத்திற்கு எதிராக வழக்குத் தொடர்வதில் உங்களுக்குள்ள உரிமைகளை அறிய உடன் தொடர்பு கொள்ளவும்

வீட்டுப்பெண்ணா அல்லது குழந்தை பராமரிப்பவரா? வேலை செய்கிறீர்களா அல்லது வேலையில்லையா? பள்ளி மாணவரா? எவராயிருப்பினும் உங்களால் நஷ்டஈடு பெறமுடியும். நீங்கள் சாரதியாக இருந்தாலும் பாதசாரியாக இருந்தாலும் பேரூந்தில் பயணிப்பவரானாலும் சைக்கிளில் செல்பவரானாலும் இன்னும் தவறு உங்களுடையதாக இருப்பினும் கூட உங்களால் நஷ்டஈடு பெறமுடியும்.

**உங்கள் அறியாமையால் வாரத்திற்கு $1000.00 வரை இழப்பதற்கு அனுமதியாதீர்கள்**

**பிழையான அனுபவமில்லாத ஆலோசனைகளுக்குள் விழுந்து விடாதீர்கள்**

தமிழ் உட்பட 25ற்கும் அதிகமான மொழிகளில் சேவை வழங்கப்படுகிறது

*இலவச ஆலோசனைகளுக்கும் தமிழில் தொடர்புகளுக்கும் இன்றே அழையுங்கள்*

**தீபன் - (416) 505-9804**

* 5255 Yonge Street, Suite 200, North York
* 257 Dundas Street E., Unit 1, Mississauga
* 29 King Street E., Unit 7, Kitchener
* 507-251 Bank Street, Ottawa
* 195 Main Street E., 1st Floor, Hamilton
* 75 Collier St., Unit A, Barrie








# விளையாட்டுத் தகவல்கள் - 104

## ஜெயசூரியாவிற்கு தலைக்கு வந்தது! தலைப்பாகையுடன் போயிற்று!!



கடந்த பல வருடங்களாக தொடர்ந்து பல வெற்றிகளை முரளிதரனை வைத்து வெற்றியீட்டிய ஸ்ரீலங்கா அணி திடீரென தொடர்ந்து தோல்விகளை அடுத்தடுத்து சந்தித்தது. இதனால் ஜெயசூரியாவின் கப்டன் பதவி பறிக்கப்படலாம் என்ற நிலைமை இருந்தது. ஆனால் சென்ற வாரம் பங்களாதேஷ் அணியை இனிங்சாலும் 196 ஓட்டங்களாலும் வெற்றி கொண்டது மட்டுமல்லாமல் 126 வருட test சரித்திரத்தில் அதிகூடிய வெற்றி இனிங்சாலும் அதிகளவு ஓட்டங்களாலும் என்ற ஒரு புதிய சரித்திரமும் எழுதப்பட்டதால் ஜெயசூரியாவின் கப்டன் பதவிக்கு வந்த ஆபத்து தலைப்பாகையுடன் போய் உள்ளது.



கடந்த பல வாரங்களாக "விளம்பரம்" இரசிகர்களுக்கு சுடச்சுட உலககிண்ண போட்டிகளின் விபரங்களை தந்த "விளம்பரம்" பத்திரிகையில் கிரிகெட் இரசிகர்களுக்கு உதைபந்தாட்டத்தை விட்டு இம்முறை இனிப்பான கிரிக்கெட் செய்தியுடன் சந்திப்போம்.

கடந்த சில மாதங்களாக ஸ்ரீலங்கா அணி அடுத்தடுத்த தோல்விகளைச் சந்தித்து வந்துள்ளது. டெஸ்ட் ஆட்டங்களில் உலகில் 11 டெஸ்ட் போட்டிகளை தொடர்ந்து வென்றதன் மூலம் சென்ற ஆண்டு ஸ்ரீலங்கா இரண்டாவது இடத்தை எட்டிப் பிடித்தது. அதே போல் ஒரு நாள் மட்டுப்படுத்தப்பட்ட ஓவர் ஆட்டங்களில் பல வெற்றிகளை பெற்றதன் மூலம் அவுஸ்திரேலியா, சவுத் ஆபிரிக்காவிற்கு அடுத்தபடியாக மூன்றாவது இடத்திற்கு ஸ்ரீலங்கா உயர்த்தப்பட்டுள்ளது. வெற்றிக்கு எல்லாம் சோதனைக் களமாக சாஜா கிண்ணம் 2002இல் 12 புள்ளிகளைப் பெற்று நியூசிலாந்து அணியையும் பாகிஸ்தான் அணியையும் தலா இரண்டு ஆட்டங்களிலும் வெற்றி கொண்ட ஸ்ரீலங்கா அணி இறுதியாட்டத்தில் பாகிஸ்தான் அணியிடம் பரிதாபகரமாக தோல்வியுற்றது. இறுதியாட்டத்தில் முரளிதரன் காயப்பட்ட நிலையில் பங்கு கொள்ளவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. அடுத்து இங்கிலாந்து நாட்டிற்கு விஜயம் செய்த ஸ்ரீலங்கா அணி முரளிதரன் இல்லாமல் எப்படி தங்கள் திறமையைக் காட்டப் போகின்றது என்பதை எல்லோரும் எதிர் பார்த்திருந்த வேளையில் இங்கிலாந்து அணியுடன் மூன்று டெஸ்ட் போட்டிகளில் மே, யூன் மாதங்களில் மோதியது. முதல் போட்டி வெற்றி தோல்வியின்றி முடிவுற்றது. இரண்டாவது டெஸ்டில் இங்கிலாந்து அணி, 11 டெஸ்ட் போட்டிகளில் தொடர்ந்து வெற்றி ஈட்டி வந்த ஸ்ரீலங்கா அணியை இனிங்சாலும் 111 ஓட்டங்களாலும் வெற்றியீட்டியது. அடுத்த மூன்றாவது டெஸ்டில் 10 விக்கெட்டுகளால் வெற்றி கொண்டதன் மூலம் 2-0 என்ற டெஸ்ட் தொடரை இங்கிலாந்து அணி வெற்றி ஈட்டியது.

அடுத்து யூன், யூலை மாதங்களில் நடைபெற்ற Nat west தொடர்போட்டிகளில் ஸ்ரீலங்கா அணி இங்கிலாந்து, இந்தியா அணியுடன் மோதியது. இதில் 6 ஆட்டங்களில் 5 ஆட்டங்களில் தோல்வியை கண்டு ஒரு ஆட்டத்தில் மட்டுமே வெற்றி கொண்டது. Nat west இறுதியாட்டத்தில் இந்தியாவும் இங்கிலாந்துமே மோதி இந்தியா வெற்றி ஈட்டியது. படுதோல்விகளை சந்தித்ததன் மூலம் ஸ்ரீலங்கா அணி வீடு திரும்ப வேண்டிய நிலை ஏற்பட்டது.

உலக சாதனையை முறியடிக்க போட்டி போடும் முரளிதரனை ஓய்வு கொடுக்கின்றோம் என்ற பாவனையில் அடுத்த டெஸ்ட் ஆட்டத்திற்கு நிற்பாட்டி வைத்துள்ளது. இதை எதிர்த்த முரளிதரன் மீதும், அணித் தலைவர் ஜெயசூரியா மீதும் குற்றம் சாட்டி விசாரணை நடாத்தவுள்ளது. அது நிற்க!

பங்களாதேஷ் அணிக்கும் ஸ்ரீலங்கா அணிக்கும் நடைபெற்ற யூலை 21 - 25 திகதி நடைபெற்ற 5 நாள் டெஸ்ட் போட்டியை மூன்று நாட்களிலேயே முடிந்துள்ளது. முதலில் துடுப்பெடுத்தாடிய பங்களாதேஷ் அணி முதல் இனிங்சில் சகல விக்கெட்டுகளையும் இழந்து 161 ஓட்டங்களை மட்டுமே எடுத்தது. முரளிதரன் 19 ஓவர்கள் பந்துவீசி 6 மேடின் ஓவர்களை எடுத்து 39 ஓட்டங்களை மட்டும் பெற்று 5 விக்கெட்டுகளை கைப்பற்றினார். அடுத்து களம் இறங்கிய ஸ்ரீலங்கா அணி 9 விக்கெட் இழப்பிற்கு 541 ஓட்டங்களை எடுத்தது. இதில் மீண்டும் டெஸ்ட் ஆட்டங்களில் விளையாட அழைக்கப்பட்டு இருக்கும் அரவிந்த டி சில்வா தனது 19 வருட டெஸ்ட் அனுபவத்தை கருத்தில் கொண்டு 206 ஓட்டங்களையும், ஜெயசூரியா 145 ஓட்டங் களையும், (இதில் 6 சிக்கஸர்களும், 13 பவுண்ரிகளும் அடங்கும்) எடுத்தனர்.

அடுத்து இரண்டாவது இனிங்சில் முரளிதரன் பந்துவீச்சிற்கு தாக்கு பிடிக்க முடியாமல் சகல விக்கெட்டுகளையும் இழந்து 184 ஓட்டங்களை எடுத்ததன் மூலம் ஸ்ரீலங்கா அணி இனிங்சாலும், 196 ஓட்டங்களாலும் அதிகூடிய வெற்றியைப் பெற்றது. இதில் மீண்டும் முரளிதரன் 5 விக்கெட்டுகளைக் கைப்பற்றி மொத்தமாக இரண்டு இனிங்சாலும் 10 விக்கெட்டுகளை கைப்பற்றியதன் மூலம் Man of the match விருதை வெற்றி ஈட்டினார்.

### எஸ். கணேஷ்

கடந்த இரு தொடர்களிலும் முரளிதரன் ஒரு போட்டியில் மட்டுமே கலந்து கொண்டார். இதில் இருந்து முரளிதரன் இல்லாத ஸ்ரீலங்கா அணி ஒரு துரும்பிற்கு சமன் என்பது நிருபிக்கப்பட்டுவிட்டது.

காயப்பட்ட நிலையில் இருந்த முரளிதரன் ஸ்ரீலங்கா திரும்பி சில வாரங்கள் ஓய்வு எடுத்த பின்பு மீண்டும் பங்களாதேஷ் இற்கு எதிராக முதல் டெஸ்ற் போட்டியில் கலந்து கொண்டார். இதில் மீண்டும் உலகிலேயே சிறந்த பந்து வீச்சாளர் தான் என்பதை உலகிற்கு தெரியப்படுத்தினார். அதாவது ஓர் ஆட்டத்தில் 10 விக்கெட்டுகளை எடுத்ததோடு மட்டுமல்லாமல் 11வது தடவையாக 10 விக்கெட்டுகளை ஒரே ஆட்டத்தில் எடுத்த ஒரே ஒரு வீரரான நியூசிலாந்து அணியைச் சேர்ந்த உலகப் புகழ்பெற்ற Richard Hadlee's இன் உலக சாதனையை முரளிதரன் இம்முறை சமன் செய்துள்ளார். ஆனால் Richard Hadlee 11வது 10 விக்கெட்டுகளை ஒரே ஆட்டத்தில் எடுப்பதற்கு எடுத்துக் கொண்ட மொத்த டெஸ்ட் ஆட்டங்கள் 98 ஆகும். ஆனால் முரளிதரன் 76வது டெஸ்ட் ஆட்டத்தில் எடுத்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. இதுவரை 430 விக்கெட்டுகளை 76 டெஸ்ட் ஆட்டங்களில் எடுத்ததன் மூலம், உலக சாதனையான மேற்கு இந்திய தீவுகளின் அணியைச் சேர்ந்தவரான Courtny Walsh இன் சாதனையான 519 விக்கெட்டுகள் 32 டெஸ்ட் ஆட்டங்களில் எடுத்த உலக சாதனையை ஒரு தமிழன் வெகு விரைவில் முறியடிப்பார் என்று முழு தமிழ் சமூகமும் பெருமையுடன் எதிர்பார்த்து இருக் கின்றது என்றால் மிகையாகாது.



வீடு விற்க, வாங்க, மற்றும் குறைந்த வட்டி வீதத்தில் மோட்கேஜ் ஒழுங்குபடுத்திக் கொள்ள, இலவச ஆலோசனைகளிற்கும் ஆகக் கூடிய வீடுகளை விற்கும் Re/Max வீட்டுப் பிரதிநிதி "கேதா"வை நாடுங்கள்.



தொடர்புகளிற்கு: 416-677-4707 416-491-4002

24 hrs

## திரு இருதய ஆண்டவருக்கு செபம்

எல்லாம் வல்ல இறைவனே நான் மிகுந்த விசுவாசத்துடன் உம்மிடம் கெஞ்சிக் கேட்கிறேன் எனக்கு இத்துன்பகரமான வேளையில் உமது வல்லமையான கரங்களால் ஆறுதல் அளித்தருளும். என்னிடம் பாராமுகமாய் இராதேயும் நல்ல இயேசுவே.

உமது கதவுகளைத் எனக்கு திறந்து விடும். உமது வல்லமையான கரங்கள் தாம் நான் விரும்பும் சாந்தியை எனக்கு என்றும் அளிக்க வல்லன.

**உமது 3 கஷ்டங்களைக் கூறவும்.**


என் ஆண்டவரே இரந்து கேட்கும் பாவியான என் இதயத்தின் வேண்டுதலுக்கு செவி சாய்த்தருளும் உமது நித்திய வீட்டை நான் வந்து அடைய எனக்கு வழி காட்டியருளும். ஆமேன்

* என் ஒவ்வொரு தேவைகளின் போது தாழ்மையுடனும் நம்பிக்கையுடனும் உம்மிடம் வர இயேசு எனக்கு உதவியருளும்.
* என் சந்தேகங்கள் கலக்கங்கள், சோதனைகளில் இயேசுவே எனக்கு உதவியருளும்.
* என் நம்பிக்கைகள் ஏமாற்றங்கள் துன்பங்கள் வேதனைகளில் இயேசுவே எனக்கு உதவியருளும்.
* மற்றவர் என்னை ஏமாற்றும் போது உம்மை மட்டும் நம்பியிருக்கும் எனக்கு இயேசுவே எனக்கு உதவியருளும்
* நீரே என் ஆண்டவர் மீட்பர் என நான் வரும்போது இயேசுவே எனக்கு உதவியருளும்
* என் வாழ்வில் எல்லா முயற்சிகளுமே தோல்விகளாய் மாறும் போது இயேசுவே எனக்கு உதவியருளும்
* நான் பொறுமையிழந்து என் சிலுவை துன்பத்தின் மீது துன்பத்தை தரும்போது இயேசுவே எனக்கு உதவியருளும்
* நான் தனிமையிலும் வருத்தந்திலும், வேதனையிலும் உழலும் போது இயேசுவே எனக்கு உதவியருளும்
* எப்போதும் எமது பலவீனங்களின் தோல்விகளின் போது இயேசுவே எனக்கு உதவியருளும்.


**முக்கிய குறிப்பு:** இச்செபம் வல்லமை மிக்கது. உங்கள் வேண்டுதல் எவ்வளவு கஷ்ரமானதாக இருந்தாலும் இச் செபத்தின் மூலம் அடையலாம். மாதத்தின் முதல் வெள்ளியிலிருந்து தொடர்ந்து 15 நாட்களுக்கு செபத்தை செபிக்கவும். ஒவ்வொரு நாளும் ஒரு மெழுகுவர்த்தி கொழுத்தி செபம் முடிய அணைத்துவிடவும். 15 நாள் முழு மெழுவர்த்தியை எரிய விடவும். (15 நாளும் ஒரே மெழுகுவர்த்தியை எரிய விடவும்) R.W

ACTION HONDA

புதிய பழைய HONDA, VOLVO மற்றும் CHRYSLER வாகனங்களை ஈழத்தமிழ் மகன் சோதீஸ் இடம் பெறும்போது




எங்கும் கிடைக்காத குறைந்த விலை
I will beat any price
ஆயுள் காலத்திற்கு
Oil Change இலவசம்
Life time Oil change
சிறந்த நேர்மையான சேவை
Best Service





Call me Now!! 416-704-1179

Mon, Fri, Sat: 9am- 6pm
Tues, Wed: 12pm- 9pm
4334 Kingston Rd, Scarborough





# ஆரோக்கிய வாழ்வு

N. செல்வசோதி



## வாய்விட்டு சிரித்தால் நோய் விட்டுப் போகும்

"சிரிப்பு வருது - சிரிப்பு வருது சிரிக்கச் சிரிக்கச் சிரி[illegible]ருது" என்று சந்திரபாபு ஒரு தமிழ்த் தி[illegible] படத்தில் பாடினார்.

சிரிப்பு வருவது போதாது சிரிக்கத் தெரிந்திருக்கவும் வேண்டும். சிரிக்க நகைச் சுவையை இரசிக்கத் தெரிந்திருக்க வேண்டும். அத்துடன் நகைச் சுவையாகப் பேசத் தெரிந்திருக்க வேண்டும்.

நகைச் சுவையை இரசிக்கவும் பேசவும் தெரிந்தவன் வீடு, அலுவலகம், நண்பர், கூட்டம்... தானெங்கு சென்றாலும் கவலை இல்லை. எந்த சூழ்நிலையானாலும் அந்த மனிதன் கலங்கவோ கவலைப்படவோ மாட்டான்.

நீங்கள் இலக்கியம் அல்லது அரசியல் பொதுக் கூட்டங்களுக்குச் சென்றிருப்பீர்கள். அங்கு சில பேச்சாளர்கள் தன் பேச்சுக்கு நடுவில் கூட்டத்தினருக்கு சலிப்பு ஏற்படாமலும் நேரம் போவது தெரியாமலும் இருக்க சில நகைச் சுவைகளை எடுத்து விடுவர். புராண, இலக்கியச் சொற்பொழிவுகளில் குலுங்கக் குலுங்க சிரிக்கும்படி சில நகைச் சுவைகளைக் கூறுவார். இதனால் கூட்டம் கலையாமலிருக்க உதவுகிறது. அவர் சொல்வதைக் கேட்டு வாய்விட்டுச் சிரிப்பதால் கூட்டத்தினருக்கு அதிக நன்[illegible] ஏற்படுகிறது. அவர்களுடைய கவலை, வீண்[illegible]அச்சம், ஏமாற்றம் என்பன அகன்று போவதுடன் உடல் ஆரோக்கியம் அபிவிருத்தியடைகிறது.

சிரிப்பைக் குறித்து மருத்துவ விஞ்ஞானிகள் ஆராய்ச்சி செய்தனர். மகிழ்ச்சியாக வாய்விட்டுச் சிரிக்கும் போது சுவாசிப்பதற்கு முக்கிய உறுப்பாக விளங்கும் நுரையீரல் சிறப்பாக இயங்குகிறது. நரம்பு மண்டலத்தின் மூலம் இதயத்தைத் தூண்டி நன்றாகச் செயல்பட வைக்கிறது. இதயம் நன்கு இயங்குவதால் இரத்தப் பாய்ச்சல் உடல் முழுவதும் நல்ல முறையில் பரவுகிறது. தசைகளுக்கு ஓய்வு அளிக்கிறது.

சிரிக்கவும் சிரிக்க வைக்கவும் தெரிந்திருப்பது நமது திறமையை வளர்க்க உதவுகிறது. நமது நகைச் சுவை நமது நண்பர்களையும் உறவினர்களையும் மேலும் நெருக்க மாக்குகிறது. வாய்விட்டு உரக்கச் சிரிப்பதால் பிறரது துன்பத்தையும் கவலையையும் சற்று மறக்கச் செய்யலாம். இதனாலேயே சொற் பொழிவாளர் பேச்சின் நடுவே ஒரு நகைச்சவையை எடுத்து விடுவார். அரசியல் இலக்கிய பத்திரிகைகள் நகைச்சுவை (cartoon) பகுதிகளுக்குத் தனி இடம் அளித்து பிரசுரிக்கின்றன. இவை வாசகர்களின் சலிப்பையும் வெறுப்பையும் மாற்றி பத்திரிகையின் மீது ஆர்வம் காட்டத் தூண்டுகிறது.

சிரிக்கவோ நகைச்சுவையை இரசிக்கவோ தெரியாதவன் முட்டாள். இது மாத்திரமல்ல அவன் எதற்கும் உபயோகம் இல்லாதவன் என்று ஒரு அறிஞர் கூறியிருக்கிறார். நகைச் சுவையை இரசிக்கத் தெரியாதவனுக்கு பிறர் தொடர்பே இல்லாது போய்விடலாம்.



**ஒரு பிரபல நாடகாசிரியர் கூறுகின்றார்**
"ஒரு முட்டாள் என்னைச் சிரிக்க வைப்பதைவிட என்னுடைய சொந்த அனுபவம் என்னை முட்டாளாக்கிவிடும்" அவர் கூறுவது முற்றிலும் உண்மை. சிரிப்புதான் அனுதாபம், அன்பு, கருணை போன்றவற்றுக்கு ஆணிவேர் போன்றது. மக்களிடையே நகைச்சுவை இரசனை உடைய மனிதர்கள் அநேகமானோர் கலந்து வாழும் போது இன மத சமூக வேறுபாடுகள் நீங்கி ஒற்றுமை வளர்கிறது. சிரிக்கவும் சிரிக்க வைக்கவும் தெரிந்தவன் எங்கு சென்றாலும் எந்த சூழ்நிலையிலும் மனம் தளரவே மாட்டான்.
பண்டைக் காலத்து மருத்துவர்கள் சிரிப்பின் மகத்துவத்தை நன்றாக அறிந்திருந்தார்கள். எத்தகைய நோயையும் நோயாளியைச் சிரிக்க வைப்பதன் மூலம் குணமாக்கி விடலாம் என்று கருதினார்கள். அதனாலேயே "வாய்விட்டுச் சிரித்தால் நோய் விட்டுப் போகும்" என்ற ஒரு பழமொழி உருவாகியுள்ளது.

### நோய்களும் அறிகுறிகளும்

| நோய் | அறிகுறி |
|---|---|
| 1. வயிறோட்டம் | மலம் தண்ணீரகப் போவது, உடல் சோர்வாக இருப்பது. |
| 2. நீரிழிவு | அடிக்கடி தண்ணீர்தாகம், அடிக்கடி பசி எடுத்தல், உடல் சோர்வு கால்வலி, கண்பார்வை கோளாறு. |
| 3. மாரடைப்பு | இதயத்தில் மந்தமான வலி, கல்லீரலை சுற்றி மந்தமான வலி, தூக்கமின்மை, கணுக்கால் வீக்கம், வரட்டு இருமல் அமைதியின்மை, இதயம் வேகமாகத் துடிப்பது. |
| 4. ஆஸ்துமா | மூச்சுவிடும்போது திணறுதல் |
| [illegible] இரத்த அழுத்தம் | உடல் பருமல் ஆவது, காதில் இரைச்சல், உடல் சிவந்து போதல், தலைவலி |


**ELECTRICAL REPAIRS**

உங்களிடமுள்ள சகல விதமான
ரெலிவிசன்கள் றேடியோக்களைக் குறைந்த
செலவிலும், சிறந்த முறையிலும் குறிப்பிட்ட
நேரத்திலும் திருத்திக் கொள்ள நாடுங்கள்.



முருகதாஸ்- 416.26.16883



**முழவுமொழி 2002**

ஆகஸ்டு 10
சனிக்கிழமை
மாலை 5:30
Mega Banquet Hall
3330 Pharmacy Avenue
(Pharmacy/McNicoll)
Scarborough.

★தமிழக எரிமலைகளின் குமுறல்!
★நடனம்!
★கவியரங்கம்!
★நாடகம்!
இவற்றோடு...
அறுசுவை உணவு விருந்தும்!
வானம்பாடிகளின் இசை விருந்தும்!



(Keele/Sheppard)
416. 638. 9554

5010 Steeles Avenue West, Unit 14
(Steeles/Kipling)
416. 740.7971

(Hwy 10 & Dundas)
905. 270.7576





**THE CHILDREN EDUCATION TRUST OF CANADA**

(CET)
சீலன். A
416-451-0271

உங்கள் குழந்தையின் எதிர்கால கல்வியில் ஒரு சிறுதொகையை முதலிடுவதுடன் கனேடிய அரசின் வருடத்திற்கு **$400 இலவசம்**

அரச அங்கீகாரம் பெற்ற புலமைப் பரிசில் சேமிப்புத் திட்டம். (R.E.S.P)



* The Scotia Bank
* The Royal Trust
* Grant Thornton

**TWO YEARS DIPLOMA**ஐ வெற்றிகரமாக முடிப்பதன் மூலம் சகல புலமைப் பரிசில்களையும் பெற முடியும்.

இன்னும் பல சலுகைகள் உண்டு

உலகின் எந்தப் பாகத்திலும் அங்கீகரிக்கப்பட்ட கல்வி நிறுவனங்களில் கல்வி பெறலாம்

இலவச ஆலோசனைகள் எந்நேரமும் தொடர்பு கொள்ளலாம்.

நாம் நமது குழந்தைகளை வளர்க்கத் தவறிவிட்டால் அதனால் பாதிக்கப்படுவர்கள் நமது பேரக் குழந்தைகளே!


### தெரிந்து கொள்ளுங்கள்

- கடல் ஆமைகள் ஒரே சமயத்தில் நூறு முதல் நூற்றி ஐம்பது முட்டைகள் வரை இடும்.
- ஒரு பட்டுப் பூச்சியின் கூடு சுமார் 3000 அடி நீளம் கொண்ட பட்டுநூலைக் கொடுக்கிறது.
- ஈசலின் ஆயுட்காலம் ஒரே ஒரு நாள்தான்.
- தென்னை மரம் பூலோகக் கற்பக விருட்சம் என்று அழைக்கப்படுகிறது.

# ALL IN 1 AUTO SERVICE LTD.

**15 GRANGER AVE. (MIDLAND & DANFORTH RD.) 416-264-4006**




**AUTO BODY REPAIR, PAINTING GENERAL REPAIR & USED CAR BUY & SELL**



**LIMO SERVICE 416-991-5201**

**TAXI RENTALS & REPAIR LAW PRICE**






**TOWING SERVICE 416-531-7311**

Special Castrol GTX

- Engineered for greater protection against breakdown
